சுண்டுக்குளி கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | இதழ் 208 | ஆவணி 21 | ஜூசகஜ் 20
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 6-9=1985

## "பொலிஸ்நிலையத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது"

(திருகோணமலை)

தமிழ்த்தீவிரவாதிகள் குச்சவெளிப் பொலிஸ் நிலையம் மீது நேற்றுக்காலை நடத்திய தாக்குதலை பாதுகாப்புப்படையினர் முறியடித்துள்ளதாக அரசு தரப்பில் நேற்றுமாலை அறிவிக்கப்பட்டது

இத்தாக்குதல் முயற்சியின் போது இரு தரப்பிலும் எவரும் உயிரிழக்கவோ, காயமடையவோ இல்லை என்றும், கட்டிடத்திற்கும் எவ்விதசேதமும் ஏற்படவில்லை என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலையிலுள்ள சிறிமாபுரம் இராணுவ முகாம் மீது தமிழ்தீவிரவாதிகள் நேற்று நண்பகல் மேற்கொண்ட தாக்குதலை பாதுகாப்புபடையினர் முறியடித்து விட்டனர் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## பயணிகள் பஸ் மதவாச்சியில் தாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை கொழும்பு நோக்கிப்புறப்பட்ட நான்கு

(8ம் பக்கம் பார்க்க)



## "அந்த புருட்டஸை கண்டுபிடிக்கவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் முன்னாள் எம்.பி திரு வி. தர்மலிங்கத்தின் இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

சுன்னாகம் சந்தையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரமுள்ள திரு தர்மலிங்கத்தின் இல்லம் உள்ள ஆத்திரோடை வரை மக்கள் வெள்ளம்போல் திரண்டு

(5-ம் பக்கம் பார்க்க

## நேற்று நடந்த பூரண ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான வி. தர்மலிங்கம், எம். ஆலாலசுந்தரம் ஆகியோருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் நேற்று யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் அரசாங்க செயலகம், யாழ் மாநகர சபை, கல்விக் கந்தோர், மற்றும் சகல அரசாங்க காரியாலயங்கள் நேற்று வெறிச்சோடின. காலையில் வந்த சில ஊழியர்கள் உடனடியாக திருப்பிச்சென்றுவிட்டனர்.

யாழ் நகரிலுள்ள சகல பாடசாலைகளும் நடைபெறவில்லை சில கல்லூரிகளுக்கு குறைந்தளவு மாணவர் வந்திருந்த போதும் அவர்களும் திரும்பிச் சென்றனர்

யாழ் நகரில் சகல வர்த்தக

5 ம் பக்கம் பார்க்க)



## 'கொலைமூலம்கொள்கைகளை அழித்துவிட முடியாது"

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் முன்னாள் எம்.பி. திரு ஆ மு ஆலாலசுந்தரத்தின் இறுதி ஊர்வலத்தில், பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரிகைகள் சைவாசார முறைப்படி நடைபெற்றதைத் தொடர்ந்து அஞ்சலி

(5-ம் பக்கம் பார்க்க)

# ரொமேஷ் அடுத்தவாரம்விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி மீண்டும் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்வார்.

இனப்பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவுடன 'இறுதிச்சுற்று' ஆலோசனை நடத்த கொழும்பு வரும் திரு ரொமேஷ் பண்டாரி, தமது திடீர் விஜயம் சம்பந்தமாக இலங்கை அரசுக்குத் தெரிவித்திருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன

இனப் பிரச்னைக்குத்தீர்வு காண்பதில் ஏக்காரணம்

(5ப பக்கம் பார்க்க)

## 3500 மாணவர் ஊர்வலம்

(சென்னை

டாக்டர் ஏ. எஸ் பாலசிங்கம், சட்டத்தரணி என் சந்திரசேகரா ஆகியோருக்குப் பிறப்பிக்கப் பட்டுள்ள நாடு கடத்தல் உத்தரவை வாபஸ்பெறக் கோரி நேற்று சென்னையில் பெருந்தொகையான மாணவர்கள் ராஜ்பவ

[8 ம் பக்கம் பார்க்க]

## உரிமைகோராததற்கு 'புளொட்' கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களான திரு வி தருமலிங்கம், திரு எம் ஆலாலசுந்தரம் ஆகியோர் கடத்தப் பட்டுக் கொலைசெய்யப்பட்டதற்கும் தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று 'தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) மறுப்புத்தெரிவித்துள்ளது.

இக்கொலைச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அதற்கான தகுந்த காரணம் தெரிவிக்காததற்கும், உரிமை கோராததற்கும் 'தமிழீழ விடுதலைக் கழகம்' கண்டனம் தெரிவித்துள்ளது. (மா)

## ராஜீவ் அனுதாபச் செய்தி

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட திரு. வி. தர்மலிங்கம், திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரின் குடும்பத்துக்கு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி துக்கம் தெரிவித்து அனுதாபச்செய்தி களை அனுப்பிவைத்துள்ளார்.

அதேசமயம் இந்திய அரசாங்கத்தினதும், இந்திய மக்களினதும் சார்பில், இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு ஜே என் டிக்ஸிற மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபச் செய்திகள்

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசு நடவடிக்கை பற்றி 'அமிரு'க்கு ரொமேஷ் தகவல்

(சென்னை)

"இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு இலங்கை அரசிடம் வற்புறுத்த இந்திய அரசு சகல முயற்சிகளையும் எடுத்து வருகிறது" என்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி தம்மிடம் உறுதியளித்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணி

(5-ம் பக்கம் பார்க்க)

## மரணப்பிடியில் 29-வது நாள்

(யாழ்ப்பாணம்)

'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி ஆர் எல். எவ் வெளியிட்டுவரும் 'ஈழம் செய்தி பலகை' யில் இறு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## மதவாச்சியில் வான் தீக்கிரை! மூவர் உயிருடன் கொளுத்தப்பட்டனர்?

(கொழும்பு)

எரிபொருள் ஏற்றுவதற்காக சாரதி கிளினர் உட்பட மூன்று பேருடன் வவனியாவிலிருந்து அனுராதபுரம் சென்ற வான் ஒன்று. மதவாச்சியிலுள்ள தவசிகலை என்ற இடத்தில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று பேரும் இதற்குள் அகப்பட்டு இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது

இந்த வான் வவனியாவின் முன்னாள் ஐ. தே. கட்சி அமைப்பாளர் புலேந்திரனின் எரிபொருள் நிலையத்துக்குச் சொந்தமானதாகும்

## சுவரொட்டி மூலம் அஞ்சலி

(யாழ் பாணம்)

திருகோணமலையிலுள்ள ஓரிடத்தில் ஆயுதப்படையினர் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தபொழுது

8ம் பக்கம் பார்க்க)

## நாளை நடைபெறும் மாதர் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

மாதர் மறுமலர்ச்சி பேரணி நடத்தும் ஊர்வலம் நாளை நடைபெறும்.

மருதனாமடத்திலிருந்து நாலைக்காலை ஒன்பது மணியளவில் ஆரம்பமாகும் மாதர் ஊர்வலம் கே கே எஸ், வீதி வழியாக யாழ் பல்கலைக்கழகம் சென்று அங்கிருந்து ஊர்வலமாகவே சென்று திருநெல்வேலி உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று பேரணியினர் சமர்ப்பிப்பார்கள்.

## பாவற்குளத்தில் ஐவர் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

வவனியா பாவற்குளம் பகுதியில். நேற்று ஐந்து இந்திய வம்சாவழித் தமிழர்கள் சுட்டுக் கொலைப்பட்டனர்.

இந்த ஐந்துபேரின் சடலங்களும் வவனியா ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சம்பந்தனுக்கு பாதுகாப்பு?

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்டோர் இணைப்புக் குழுவின் செயலாளரும். தொழிற்சங்கவாதியுமான

[5-ம் பக்கம் பார்க்க]

# விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் அரசாங்க மரக்காலைக்கு முன்பாக நான்கு பக்கமும் சுற்று மதிலுடன் கூடிய 3½ பரப்புக் காணியுடன் சகலவசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த. கனகேந்திரன், விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை. 567

மானிப்பாய் [தபால்] கந்தோர் வீதியில் 1½ பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. மேதர், 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 569

கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு முன்பாக தொழிற் ஸ்தாபனத்திற்கும், குடியிருப்புக்கும் உகந்த அரை ஏக்கர் காணி உடன்விற்பனைக்குண்டு. விலை நேரில் தீர்மானிக்கலாம். தொடர்பு: ஞ. நாயகம் சிற்றம்பலம், 66, திருநகர், கிளிநொச்சி. 520

புதிய யன்னல் நிலைகள் (6'×4'), கதவு நிலைகள் (3'3''×8') ஆகியன சகாயவிலைகளில் விற்பனைக்குள்ளன. வீடு கட்டுவதில் சிக்கனத்தை நாடுவோருக்கு அரிய வாய்ப்பு. தொடர்பு கொள்க: விளம்பரதாரர் மே/பா Dyn. Ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி (சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக). 573

## குத்தகைக்கு

யாழ்ப்பாணம் இன்னசிட்டைக்கு அண்மையில் 417, பீச் றோட்டில் சகல வசதிகளைக் கொண்ட கடை குத்தகைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். துரைரத்தினம் 50, பாரதிவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 562

**பழையவெற்றுறம்கள், பழைய ரயர்கள், ரியூப்கள் மற்றும் லொறி உதிரிப்பாகங்கள்**

## ஏல விற்பனை

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மேற்படி பொருட்கள் எதிர்வரும் 1985-09-13 வெள்ளிக்கிழமை காலை 10-00மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொதுமுகாமையாளர்,**
பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை,
1985-09-04. 568

**A/L 86**
பகல் நேர வகுப்பு
**ஆரம்பம்:**
**9-9-85**

10-30: காவிகள்
11-45: நேர்கோடு

**Ravimohan**
JAFFNA
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்கோயிலுக்கும் இடையில்) 539

## பயிற்சி

மூன்றுவருட மருத்துவ தாதிப்பயிற்சி ஆங்கில மொழி மூலம் அனுபவம் வாய்ந்த டாக்டர்களும் விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட்டு 30-8-85 ஆரம்பித்துவிட்டன. இன்னும் சில மாணவர்களுக்கே இடமுண்டு. 10-9-85க்கு முன் நேரில்வந்துவிண்ணப்பிக்கவும். உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 552

பாலர் ஆசிரியர் பயிற்சி வகுப்புக்கு இன்னுஞ் சில மாணவர்கள் மட்டும் சேர்க்கப்படுவர். G.C.E. சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 610/418, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 574

**கரைதுறைப்பற்று**
**ப. நோ. கூ. சங்கம்**
**முல்லைத்தீவு**

## பதவி வெற்றிடம்

**கணக்காளர் தரம் (104.8)**

மேற்காட்டப்பட்டுள்ள பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம். முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு 20-09-85 திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும்.

கணக்காளர் தரம் (104 8)
ரூ. 500/- —840/-
சம்பளம் ........
20 X 5 —30 X 8

தகைமை:

அ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவினரின் சுற்று நிருப இல 108/81ல் குறிப்பிடப்படும் 9வது அலகு சம்பளத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு லிகிதர் அல்லது எண்பார்வைலிகிதர் பதவியில் 3 வருடத்திற்கு குறையாது கடமையாற்றியவர் அல்லது 10வது அலகு சம்பளத்தில் மேற்படி பதவிகள் ஏதாவதொன்றில் 6 வருடங்களுக்கு குறையாது கடமையாற்றியவர். அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் கல்விநிலையத்தினரின் இறுதி ஆண்டு பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நிறுவனங்களில் கணக்கு எண்பார்வை துறைகளில் மேற்பார்வை பதவியில் 2 வருடங்களுக்கு குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர் அல்லது மேற்படிகல்விநிலையத்தின் இன்டர்மீடியட் பரீட்சை சித்தியுடன் அத்தகைய நிறுவனங்களில் மேற்குறிப்பிட்ட பதவிகளில் 4 வருடங்கட்கு குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்,

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் உயர்தர பரீட்சை சித்தி அல்லது க. பொ. த. உயர்தர பரீட்சையில் கணக்கியல் உட்பட 3பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நிறுவனங்களில் கணக்கியல் அல்லது எண்பார்வை துறைகளில் மேற்பார்வை பதவியில் 4 வருடங்கட்கு குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்.

வயது 25 — 45 வரை;

குறிப்பு:

மேற்கொண்டு இது பற்றிய விபரங்கள் தேவைப்படின் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினரின் சுற்றறிக்கை இல: 108/81 ஐ பார்வையிடவும்.

**பொதுமுகாமையாளர்,**
கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
523 முல்லைத்தீவு.

**முதலாவது பிறந்ததின வாழ்த்து**



## செல்வன் கஜன்

தாவடி வடக்கைச் சேர்ந்த அரசரட்ணம் பரந்தாமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வன் கஜன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (6-9-1985) வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மய்யா, அம்மம்மா, பெரியப்பாமார். பெரியம்மாமார், சின்னச் சித்தப்பா, மாமன்மார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உறவினர், அனைவரும் பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். 570

**பின்னுறுதிக் கட்டளை பற்றிய**

## அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

மாதகல் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா சின்னத்துரை பெண் திருஞானம்பிகை என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்
மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/245

செல்லையா சின்னத்துரை
பிரதான வீதி, மாதகல்.
மனுதாரர்

எதிர்

1. சின்னத்துரை ஞானபண்டிதன்
2. சின்னத்துரை விதாக பண்டிதன்
3. சின்னத்துரை மகள் கலாஞானபண்டிதை
4. சின்னத்துரை யோகபண்டிதன் எல்லோரும் பிரதானவீதி, மாதகல்.

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கமிட்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 09ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 20ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:

சோமசுந்தரம் தேவராசா,
மனுதாரின் சட்டத்தரணி.. 572

## எமது புதிய வெளியீடுகள்

1. புதிய சகாப்தம் — PYRAMID
விசு — விஜயகாந் — அம்பிகா
2. செல்வி — PYRAMID
சுரேஷ் — ரேவதி
3. இளங்கன்று — UNIVERSAL
முரளி — அனிதா

மற்றும் வேறு புதிய வெளியீடுகள்

**நல்லூர் வீடியோ சென்ரர்**
முத்திரைச்சந்தை, நல்லூர்.
(571)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



**கா.சிவசுப்பிரமணியம்**
(C. T. B. நடத்துனர்)

மலர்வு: 21-02-1938

உதிர்வு: 25-07-1985

கடமைக்குச் செல்லும் வழியில், மின்சாரவடிவில் காலன் உம்மைக் கவர்ந்து சென்றானோ?
அன்புத் தெய்வமே! உமது பிரிவால் துயருறும் எமக்கு ஆறுதல் எக்காலமோ? உமது ஆத்மா சாந்தி பெறுவதாக.
அன்னாரின் அந்தியேட்டி (7-9-1985) சனிக்கிழமை நடைபெறுவதால், சகலரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மனைவி, உறவினர்கள்.
ஏழாலை. 576

## ஈராண்டு நினைவஞ்சலி

**திருமதி சின்னப்பிள்ளை ஏழுர் இராசரத்தினம்**



மலர்வு:
1903-04-19


உதிர்வு:
1983-08-30

**திதி: 1985-09-06**

உங்கள் அன்பை நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்
மகள், மருமகன், சகோதரிகள்.
நக்கட்டியோடை,
மயிலிட்டி, காங்கேசன்துறை. (61)

## 61-ம் நாள் நினைவஞ்சலி

**அமரர் ஏ. சேதுலிங்கம்**
(இளைப்பாறிய உத்தியோகத்தர் வல்வை இந்திராணி வைத்தியசாலை)



மண்ணுலகம்:
08-06-1898

★

விண்ணுலகம்:
07-07-1985

உமது ஆத்ம சாந்திக்கு எமது உள்ளங்களின் பிரார்த்தனை.
மக்கள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்
நெடியகாடு, வல்வெட்டித்துறை. 4775

# தென்னாபிரிக்க 'ராண்ட்' வீழ்ச்சி
# தங்கத்தில் கைவைக்க யோசனை!

லண்டன் செப். 5

**தென்னாபிரிக்க நாணயமான 'ராண்ட்'டின் பெறுமதி வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. இவ் வீழ்ச்சியைத் தவிர்க்கும்விதத்தில் தென்னாபிரிக்க மத்தியவங்கி ஆளுநர் டாக்டர் கேஹார்ட்டிகொக் அமெரிக்கா, பிரிட்டனிடம் நிதிஉதவி கோரியுள்ளனர். அத்துடன் நிலைமையைச் சமாளிக்க இருப்பிலுள்ள தங்கத்தையும் பயன்படுத்த தென்னாபிரிக்க அரசு தீர்மானித்துள்ளது**

தென்னாபிரிக்க 'ராண்ட்' நாணயத்தின் வீழ்ச்சிக்கு இங்கு தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகளே காரணமாக அமைந்துள்ளன அத்துடன் இந்நாட்டுக்கு சர்வதேசரீதியில் வர்த்தக பொருளாதார அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதும் ஒரு முக்கிய காரணமாகும்.

தென்னாபிரிக்க மத்தியவங்கி ஆளுநர் டாக்டர் டிக்கொக், தென்னாபிரிக்க நிதிநிலைமையைச் சமாளிக்கும்வகையில் நியூயோர்க் லண்டன் ஆகியவற்றுக்கும் சென்றிருந்தார்.

நியூயோர்க்கில் அவர் பேட்டியளிக்கையில், தாம் அமெரிக்காவிடம் நிதியுதவி கேட்கவில்லையென்றும் ஆனால் தென்னாபிரிக்காவிடம் இருந்து வரவேண்டிய கடன் தொகையை அறவிடுவதை ஒத்திவைக்கும்படியே கேட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரிட்டனுக்கும் அவர் பயணம்செய்யவுள்ளார். ஆனால் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர், தமது நாட்டு வங்கிகள் தென்னாபிரிக்காவுக்கு நிதியுதவிவழங்க மாட்டாதென்ற திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தென்னாபிரிக்கா பெரும் கோடிக்கணக்கான டாலர்கள் கடன் பளுவைச் சமாளிக்கவேண்டியுள்ளது. உள்நாட்டிலும் 'ராண்ட்'டின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது இவ்வீழ்ச்சியைத் தவிர்ப்பதற்கு மத்தியவங்கி இந்நாணயத்தைப் பெருமளவு கொள்வனவு செய்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இப்பாதக நிலைமையைச் சமாளிக்க தனது இருப்பில் வைத்துள்ள தங்கத்தையும் பயன்படுத்த தென்னாபிரிக்க அரசு உத்தேசித்துள்ளது. தென்னாபிரிக்கா உலகில் முக்கியமான தங்கப்படிவுள்ள நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## கொலைகள் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட கூட்டணி உறுப்பினர்களின் கொலைகளைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவரவை 'கொலைகள்' என்ற தலைப்பில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

சுவரொட்டியில் கூட்டணி உறுப்பினர்களை கொலை செய்தவர்கள் உடன் உரிமைகோரி கொலைக்கான காரணங்களை பொதுமக்கள் முன்னிலையில் வைத்தல் வேண்டும். தவறின் நாம் சில நடவடிக்கைகளில் இறங்க நேரிடும் என எழுதப்பட்டிருந்தது. [ச]

## உலகச் செய்திகள்

# ஆலால், தருமர் கொலைகள் ஒரு ஆழ்ந்த சதி?
## சென்னையில் 'அமிர்'

சென்னை, செப். 5

"முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரின் கொலைகள் ஒரு ஆழ்ந்த சதி முயற்சியைக் குறிப்பிடுகின்றன" என்று த. வி. கூ. செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் சென்னையில் இவ்விரு தலைவர்களினதும் மறைவு குறித்து இரங்கற் கூட்டமொன்றை நடத்தினார். இக்கூட்டத்தில் இவர்களின் உருவப்படங்களைத் திரைநீக்கஞ்செய்து வைத்து அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. அமிர் கூறியதாவது:- "ஆலால், தருமர் கொலையுண்ட நேரம், சூழ்நிலை ஆகியன ஓர் ஆழ்ந்த சதி முயற்சியைக் குறிப்பிட்டுள்ளன.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் இனப்பிரச்னைத் தீர்வுக்கான நகல் யோசனைகளைப் பரிசீலிக்க இலங்கை அமைச்சரவை கூடியபோது இவை நடந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது ஆகையினாலேயே இக்கொலைகளுக்குப் பின்னணியில் ஒரு சதிமுயற்சி இருப்பதை ஊகிக்கமுடிகிறது" என்றார். (கி)

### மரக்கறிச் சந்தையில்
# மோட்டார்கார் குண்டு வெடி 14 பேர் ஸ்தலத்தில் பலி!

பெய்ரூட், செப் 5

லெபனான் கிழக்குப்பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் கார் குண்டுவெடிப்பில் 14 பேர் கொல்லப்பட்டனர்; 40 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கிழக்கு லெபனானில் கிறிஸ்தவ குடியிருப்பு ஒன்றிலுள்ள மரக்கறிச்சந்தையில் இடம்பெற்றது.

லெபனானில் கடந்த மூன்று வாரங்களில் இடம்பெற்ற ஆறாவது குண்டுவெடிப்பு இது எனத் தெரிவிக்கப்பட்டது.

இக் குண்டுவெடிப்பினால் மோட்டார்கார்கள், கட்டிடங்கள் மற்றும் உடமைகளும் பலத்த சேதத்துக்குள்ளாயின.

இதுபோன்ற மோட்டார் கார் குண்டுவெடிப்புகள் முன்னர் முஸ்லிம், கிறிஸ்தவப் பகுதிகளில் மாறிமாறி இடம்பெற்றன. ஒரு பழிவாங்கல் நடவடிக்கைகளாகவே இவை நிகழ்ந்தன எனவே நேற்றைய சம்பவத்தின் எதிரொலியாக இடங்களில் இடம்பெறலாம் வும் குண்டுவெடிப்புகள் வேறு என அஞ்சப்படுகின்றது. (கி)

### இலங்கைப் பிரச்னைக்கு
# பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காண முடியும்!"
## திருப்பதியில் நெடுஞ்செழியன்

திருப்பதி, செப். 5

"இலங்கை இனப்பிரச்னைக்குப் பரஸ்பரம் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வுகாண முடியும்." இது தொடர்பாக தமிழக அரசாங்கமோ அல்லது தி. மு. கவோ எதுவும் வற்புறுத்துவதற்கில்லை" என்று தமிழக நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

நேற்று திருப்பதியில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு இரா. நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது:-

"இலங்கை இனப்பிரச்னைக்குத் தமிழ்க் குழுக்கள் மற்றும் அரசாங்கத் தரப்பினர் பரஸ்பரம் பேச்சுவார்த்தைமூலமே தீர்வுகாணமுடியும்.

இதுவிடயமாக தமிழக அரசாங்கமோ அல்லது அ. தி. மு. கவோ இந்திய அரசை எதுவும் வற்புறுத்துவதற்கில்லை.

இந்திய அரசுக்கும் இலங்கைக்குமிடையே எதுவித தகராறுகளும் இல்லை இந்நிலையில் இலங்கையில் இராணுவத்தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

எனவே இந்திய அரசாங்கத்தினால் இலங்கைப்பிரச்னைத் தீர்வுக்கான சுமுக சூழ்நிலையை உருவாக்கமுடியும். இப் பிரச்னையில் அணிசேரா நாடுகளின் தலைமைநாடு என்றமுறையில் பிரதமர் ராஜீவினால் தீர்வு காணமுடியும் என்றார்.' (கி)

### லோங்கோவால் பாதுகாப்பு:
# 5 பொலிஸ் உத்தியோகத்தர் வேலைநீக்கம்!

புதுடில்லி, செப் 5

கொலையுண்ட அகாலிதள் தலைவர் சன் ஹர்ச்சன்சிங் லோங்கோவாலின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவிருந்த 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளனர் ஒரு பொலிஸ் அத்தியட்சகர், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர், இரு தலைமைக் கான்ஸ்டபிள்கள், ஒரு கான்ஸ்டபிள் ஆகியோரே அந்த ஐவருமாவார்.

சன் ஹர்ச்சன்சிங் லோங்கோவாலின் கொலையையடுத்து உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று இவர்கள் மீது விசாரணை நடத்தியது. பஞ்சாப் ஆளுநரின் ஆலோசகரான ஜெனரல் கௌரிசங்கர் இதற்குத் தலைமைதாங்கினார். இறுதியாக இவர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலேயே இவர்களை ஆளுநர் அர்ஜுன் சிங் வேலைநீக்கம்செய்தார்.

இதுதவிர ஒரு சப்இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு கான்ஸ்டபிள்கள் லோங்கோவாலின் பாதுகாப்புத் தொடர்பாக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

லோங்கோவாலின் பாதுகாப்புக்கு இவர்கள் அனைவரும் பொறுப்பாக இருந்தனர். அவர் கொலைசெய்யப்பட்ட தினத்தில் இவர்களின் கண்காணிப்பு போதுமானதாக இருக்கவில்லை என குற்றம் சாட்டப்பட்டது. (கி)

### கூட்டணிப் பிரமுகர்கள் கொலை:
# ஈழம் தே. வி. முன்னணி அதிர்ச்சியும் கவலையும்

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுமான திரு தர்மலிங்கம், திரு. ஆலால சுந்தரம் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டமைக்கு ஈழம் தேசிய விடுதலை முன்னணி அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டுள்ளது.

இக்கொலைகளைக் கண்டித்துள்ள மேற்படி முன்னணி இதில் அங்கம் வகிக்கும் இயக்கம் எதுவும் இதற்கு பொறுப்பாளிகள் அல்லவென்றும் தெரிவித்துள்ளனர் மரணமானவர்களின் குடும்பங்களுக்கு முன்னணி தனது அனுதாபம் தெரிவித்துள்ளது.

### எகிப்தில் பிரதமர் அமைச்சரவை
# இராஜினாமா!

செய்ரோ, செப். 5

எகிப்தில் பிரதம மந்திரி உட்பட அவரது அமைச்சரவை நேற்று ராஜினாமாச் செய்தது. இதனையடுத்து புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எகிப்திய பிரதமர் திரு. கமல் ஹசன் அலியும் அவரது அமைச்சரவையுமே நேற்று ராஜினாமாச்செய்தது.

எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் புதிய பிரதமராக திரு அலிலுப்டியை நியமித்துள்ளார். இவர் முன்னாள் நிதியமைச்சராவார். திரு அலிலுப்டி தமது புதிய அமைச்சரவையை இன்று அறிவிப்பார்

இந்த ராஜினாமாவுக்கான காரணம் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆயினும் புதிய பிரதமராக முன்னாள்

(7-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

— குறள்.

# நமது நோக்கு

## மர்மக் கொலைகளும் மக்கள் நிலையும்

தமிழ்ப் பகுதிகளில் வன்செயல் எது நடந்தாலும் குறிப்பிட்ட இயக்கத்தின் வேலையென அறிவிப்பது கொழும்பில் கடைப்பிடிக்கப்படும் ஒருவித செய்தி அளிக்கும் பாணி. இப்பகுதியில் தமிழர் [வயோதிபர், பெண்கள், குழந்தைகள்] எவரும் ஆயுதப்படைகளினால் கொலையாகும்பட்சத்தில் 'பயங்கரவாதிகள்' என வர்ணிக்கப்படுவதும் அந்த பாணியைச் சேர்ந்த அம்சமே.

முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களுமான திரு தர்மலிங்கமும், திரு. ஆலாலசுந்தரமும் படுகொலை செய்யப்பட்டதையடுத்து கொழும்புச் செய்திகள் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை சம்பந்தப்படுத்திய அதே நேரம் இங்கும் கூட பலரும் தீவிரவாத இயக்கங்களை நோக்கியே சுட்டுவிரல்களை நீட்டினார்கள்.

ஆனால் பெரும்பாலும் சகல இயக்கங்களுமே இதில் தமக்கு சம்பந்தமில்லையென்று அறிவித்துவிட்டன. ஈழம் தேசிய விடுதலைமுன்னணி (நான்கு இயக்கங்களின் அமைப்பு) தமிழ்நாட்டில் விடுத்துள்ள அறிக்கையில் இக் கொலைகள் குறித்து அதிர்ச்சியும், சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபமும் தெரிவித்துள்ளது

இந்நிலையில் இக் கொலைகள் பற்றி மக்கள் மத்தியில் பல்வேறுவிதமான சந்தேகங்களும் அபிப்பிராயங்களும் விமர்சனங்களும் நிகழ்ந்துவருவது கண்கூடு.

மக்கள் செல்வாக்கை அபரிமிதமாகப்பெற்றிருந்த ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் இவர்கள். அரசியல் சட்டத்தின் 6வது திருத்தச் சட்டத்தினால் பதவி பறிபோனது இயக்கங்களின் தீவிர செயற்பாடுகளினால் இவர்களின் அரசியல் நடவடிக்கைகள் முடங்கிப் போய்க்கிடந்தன இந்தியாவின் சமரச முயற்சிகளும் அதையொட்டிய நடவடிக்கைகளும் உச்சக்கட்டத்தையடைந்திருந்த வேளையில் இவர்கள் தம் வீடுகளிலிருந்து அழைத்துச்செல்லப்பட்டு துப்பாக்கிக்குண்டுகளுக்கு இரையாக்கப்பட்டிருக்கிறார்கள். யாருமற்ற அநாதைகள் போல் வீதியோரத்தில் போடப்பட்டிருந்தார்கள்.

இந்தப் பின்னணியை வைத்துக்கொண்டு, பல்வேறு விதமான கருத்துக்கள் உதிர்க்கப்படுகின்றன.

இயக்கங்கள் செய்திராவிடில், இயக்கங்களுக்குக் களங்கம் கற்பிக்க மேற்கொள்ளப்பட்ட சதியா? அவ்வாறாயின் சர்வதேச ஒற்றர் ஸ்தாபனங்களுக்கு இதில் சம்பந்தமுண்டா? (திரு. தர்மலிங்கம் சோவியத்-இலங்கை நட்புறவுச் சங்க உபதலைவர்.) மொஸாட், சி. ஐ. ஏ. வேலையா? அல்லது தமிழர் மத்தியில் மேலும் குழப்பங்களை ஏற்படுத்திவிடுவதற்கான மேலாதிக்க வாதிகளின் சூழ்ச்சியா?

எதுவானாலும், இவ்வாறான மர்மக்கொலைகள் தமிழர்கள் தங்களுக்குள்ளேயே பாதுகாப்பில்லாமல் இருக்கிறார்கள் என்பதை தெற்றென வெளிக்காட்டுவதை மறைக்கவியலாது.

அரச படைகளினால் மட்டுமே தமிழர்களுக்கு ஆபத்து என்ற நிலையை இதுமறுதலிப்பதாகவுள்ளது.

தமிழர் சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் புறப்பட்டிருக்கும் இளைய தலைமுறையினரின் வீரம் செறிந்த நடவடிக்கைகளுக்கு இது ஒரு சவாலாகவும் அமைகின்றது.

இயக்கங்களுக்குச் சம்பந்தமில்லையென்று அவை அறிவித்தபின் உரிமைகோரும்படியோ கொலைக்கான காரணங்களை மக்கள் முன்வைக்கும்படியோ கோருவதில் அர்த்தமில்லை.

ஆனால், 'இதற்கு யார் பொறுப்பு என்று கண்டுபிடியுங்கள், அவர்கள் பற்றிய விபரங்களை முன்வையுங்கள்- இப்படியான மர்மக்கொலைகளுக்கு இடந்தராமல் மக்களைப் பாதுகாப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து செயல்படுத்துங்கள்'' என்று கோருவதற்கு பொதுமக்களுக்கு உரிமையுண்டு.

## 'இலங்கையர்' தர்மருக்கு ஸ்கந்தவரோதயம் அஞ்சலி

ஸ்கந்தவரோதயம் கலங்கி நிற்கும் நேரம் இது பொற்புடைய புதல்வர் பலரைப் புகழோடு பெற்று, நற்றவ நாட்டில் தனி சிறந்தவராக்கிய பெருமை ஸ்கந்தாவுக்கு உண்டெனில், அது ஸ்கந்தா அன்னையை ஈன்ற எந்தை எனத்தகு சுந்தையா வள்ளலின் வாரிசு, எம். 'தருமர்' அவர்களுக்கேயுரியது.


இத்தகைய வரிசையில் அமைந்த உத்தமனை, பக்தனை, வாழ்ந்த எம் பேரன் புக்குரிய பெருந்தகை 'இலங்கையர்' மண்ணோடு மண்ணாகப் போகிறார் என்பதைச் சிந்திக்கவும் சிந்தை கலங்குகிறது. அருள் மிகு 'அண்ணாவோ' 'அண்ணாவோ' என அலறுகிறோம் நாங்கள்.

அன்னை ஸ்கந்தாவின் அன்புப் புதல்வனாய் அவளிடத்தே கல்விபெற்றுத் திரும்பவும் அவளைவிட்டுப் பிரியாமல் அங்கேயே ஆசிரியப் பணியையும் ஏற்றுக் கொண்ட ஏந்தலே! அறிவுப் பசியுடன் வந்த மாணாக்கரின் பசிபோக்கிய ஆசான். தருமங்களுட் சிறந்த வித்தியாதருமத்தைத் தங்கள் பெயருக்குத் தக வழங்கிய 'தருமலிங்கம்' நீங்கள் ஆசிரியப் பணி முடித்து அன்னையையே பொறுப்பேற்று நடத்தும் முகாமையாளர்களில் ஒருவராகித் தாங்கள் ஆற்றிய பணியை ஸ்கந்தா என்றும் மறவாள் செந்தண்மை டாக்டர் ''P.S'' சுப்பிரமணியனின் சேவையில் உயர்ந்த கல்லூரி, அவருக்குப் பின் தங்களையே முகாமையாளராகக் கொண்டாள். உங்களின் முகாமைத்துவத்திலும், சேவையிலும் கல்லூரி அன்னை உச்சநிலையை அடைந்தாள்.

ஆங்கில ஞானமும் கலைஞானமும் விஞ்ஞானமும் ஓங்கி வளர்வதற்கிடமாகக் கல்லூரியை ஆக்கி விட்டீர்கள். கல்லூரித் தாயைப் போற்றி செய்யும் மாணவர் அனைவரும் என்றுமே மறக்க முடியாத தோற்றம். அண்ணா! நீங்கள் இங்கு கற்பிக்கும் ஆசிரியர் குழாத்தின் அன்புத் தோழனார் நீங்கள். அன்னையின் எந்த வைபவமும் தங்கள் வருகையின்றிப் பூரணமடைந்ததில்லை

சுமார் 23 வருட காலம் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்று அரசியற் பணியில் முதிர்ச்சியடைந்தவர், நீங்கள் இந்த அரசியல் முதிர்ச்சி கூட அன்னைக்கும் மக்களுக்கும் உதவியாகவே இருந்தது. நாடாளுமன்றதில் பக்கக் குறைகாட்டி நிறைவு செய்துமட்டுமன்றி அவர்களின் இல்லங்கள் தோறும் இடர் தீர்க்க வாழ்ந்த பெருந்தகை நீங்கள்.

ஸ்கந்தா அன்னையைப் போன்று இன்னும் எத்தனையோ கலைக்கூடங்களை ஆக்கிய சுந்தையா வள்ளலின் சிந்தைக்குரிய சிறுவனாகி அத்தனை கலைக்கூடங்களையும் பராமரிக்கும் பெரியோனாகி வாழ்ந்த தங்களை இனிநாம் என்று காண்போம்? எப்போ காண்போம்?



இந்திய விஜயத்தின்போது திரு தர்மலிங்கம் இந்திய அமைச்சர் ஒருவரைச் சந்தித்தார்

எங்கே காண்போம்? அனாதைகளாகி விட்டோம். இன்பத்திலும் துன்பத்திலும் எம்மோடு பங்கு கொள்ளும். நின் இதயத்தை நினைப்போமா? ஆதரவு தேடி நாம் அணுகிய போது ஆறுதல் தந்த உன் அன்பை நினைப்போமா? மாறுபட்டு நாம் மயங்கிப் பேதையில் கூறுபட்டு விடாமல் எம்மைக் கூட்டி வைத்த கோலத்தை நினைப்பேமா? உமது முடிவு உள்ளத்தைத் தொடுகிறது: நேர்மையின் உறைவிடம், அமைதியின் சின்னம், உண்மைக்கு எடுத்துக்காட்டுபொறுமையின் பொக்கிஷம், எவருடனும் பகைமையேபாராட்டாத குணக்குன்று என்று தங்களைச் சுருங்கக் கூறலாம். தங்களின் அகால முடிவு எம்மை வாட்டுகின்றது உங்களை இழந்து தவிக்கும் தமிழ் மக்களும், உங்கள் குடும்பமும் பரிதவிக்கும் நிலையைக் காணக் கண் பொறுக்கவில்லை. ஈடு செய்ய முடியாத இழப்பாகவே இது அமைந்து விட்டது.

அண்ணலே, உங்கள் ஆத்மா எங்கிருந்தாலும் சாந்தி பெற்று வாழ்க பதைபதைக்கப்பிரிந்த உங்கள் உயிரை இறைவன் நிச்சயமாகத் தன்னிடத்தே அன்போடு அழைத்திருப்பான். அவனது பாதகமல நிழலிலே நிம்மதியாக நிலைத்து வாழ்வீரென்றே நம்புகிறோம். எங்கள் இறுதி வணக்கங்கள்.

—ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## மருத்துவ பீடத்தின் அங்கீகாரத்தைப் பாதிக்கும்

### மக்கள் கருத்து

இலவசக் கல்வி எமது மக்களுக்குக் கிடைத்த பேறுகளுள் ஒன்று. பூரணத்துவமற்றதாயினும் வெகுசனம் பயனடையும் என்று கருதப்பட்டது. காலத்தின் போக்கில் ஏற்படுத்தப்பட்ட சிலமாற்றங்கள் நிலைமையை சீர்கேடுடையதாக்கும் திறனுடையன.

அண்மைக் காலமாக வட பகுதியில் தனியார் சேமநலனைக் கருத்திற்கொண்டு ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியை நிறுவுவதும் அதன் தொழிற்பாட்டு விளைவுகளும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளன.

யாருக்கும் உரிமையுண்டு ஒரு ஸ்தாபனத்தை அமைக்க ஆனால் அதற்கு தகுதிவேண்டும்; முழுமை வேண்டும்; பொருத்தமான ஒத்துழைப்பு வேண்டும்: பணமே கருவியென்றில்லாது பொதுவேலைத்திட்டமும் அதன் அடிப்படையும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

தரப்படுத்தல், இனஒதுக்கல், பிரதேச பாகுபாடு, என்று சொல்லி சமுதாயத்தின், இனத்தின் மேம்பாடு என்ற கோதாவில் ஒரு சிலர் அவர்களின் பணத்தில் அவர்களின் உயர்கல்வியை பெறமுயல்கின்றனர். பணம் என்ற பேயின் ஆதிக்கம் ஓங்க தகுதியெங்கே? அவ்வாறாயின் தமிழ் மாணவர்கள் தரப்படுத்தலுக்கும் பணத்திற்குமிடையில் அல்லலுறுவரன்றோ? ஏழை மாணவர்களின் மனதை நிச்சயம் பாதிக்கும், அவர்களின் மீட்சி உறுதிப் படுத்தப்படாது. மேலும் எதிர்காலத்தில் ஒழியாது ஏங்கிக் கிடக்கும் வரதட்சணைப் பிரச்னை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியன அதிகரிக்கும்.

அடுத்து யாழ். பல்கலைக்கழகத்துடன் இப்படிப்பட்ட ஒரு தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிணைய முற்பட்டால் மற்றைய பாதிப்புகளிலும் முக்கியமாக அது மருத்துவ பீடத்தின் அங்கீகாரத்தைப் பாதிக்கும் இதன் தாக்கம் சமுதாயத்தின் எதிர்காலத்தில் நிச்சயம் இருக்கும். கட்டிமுடியாத கட்டடத்தில் பல்வேறு இடையூறுகள் மத்தியில் கல்விபயிலும் அவலநிலையில் உள்ள யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் மருத்துவ பீடம் பிரித்தானிய மருத்துவக் கழகத்தின் அங்கீகாரம் வேண்டி நிற்கின்றது. இந்த அங்கீகாரமானது எமது வருங்கால வைத்திய நிபுணர்களின் தொடர்ச்சிக்கு அவசியமானது. எமக்கு என்று தனித்துவம் பெறகாலம் உண்டு அதுவரை முன்னேறிவரும் மேலைத்தேச மருத்துவ முறைமையே கைக்கொள்ளல் வேண்டும், ஆதலினால் இந்த தனியார் மருத்து

(5ம் பக்கம் பார்க்க)

### நாளை வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயம்

## கிருஷ்ண ஜெயந்தி

செந்திரு மகளின் கேள்வன் சேந்தனின்
மாமன் தன்னை
வந்தனை செய்வார்க் கென்றும் வளர்மதி போலவே
செல்வம்
வந்திடும் கல்வி ஓங்கும் வச்சிரதகாயம் உண்டாம்
நற்திரு மாலின் கோயில் நண்ணினோர் பெறுவர்
வீடே.
வல்லியம் புரத்தில் மேய வள்ளலை
வணங்கி னோர்க்கு
எல்லையில் நலங்கள் எய்தும் ஏயவாழ் வினது
மாகும்
தொல்லையும் தொலையும் நல்ல தூய்மையும்
வந்து வாய்க்கும்
அல்லியம் அலங்கல் மார்பன் அருளுமே
அனைத்து காக்கும்.

— முருகவே பரமநாதன்

## வெற்றி வேல்!

பல்லவி

வேல் வேல் வேல் என்று சொல்லு — நல்லூர்
வீதி வலம் வந்து களித்துருகி நில்லு — வெற்றி
(வேல் வேல்)

அனுபல்லவி

தோள்மேலே காவடியைத் தூக்கு — வினை
தூளாகும் நல்லூரின் கோபுரத்தை நோக்கு
(வேல் வேல்)

சரணம்

செல்லப்பன் தவஞ்செய்த தேரடியைத்
தொழுவாய்
திருநீற்றின் ஒளிவிளக்கும் நாவலர்தான் விழுவாய்
கல்விக்கும் கலைகட்கும் நிலையான நல்லை
கண்டாலே வாழ்வியே கவலையே இல்லை
(வேல் வேல்)

ஓங்கார மணியோசை ஓடிவர என்குது
உள்ளத்தின் அழுக்கெல்லாம் அடியோடு போகுது
பாங்காக குறவள்ளி தெய்வயானை புடைசூழ
பவனி வருதல் கண்டால் பவமேது இனிமேல்ஐயா
(வேல் வேல்)

— சோ. பத்மநாதன்

# அடலேறு ஆலால்

"அடலேறு ஆலால்" என்று ஆயிரமாயிரம் மக்களால் அன்று அன்போடு அழைக்கப்பட்டு வந்த 'மக்கள் தொண்டன்' இன்று நம்மத்தியில் இல்லை.


இளைஞர் மத்தியில் இமாலயச் செல்வாக்கைப் பெற்றிருந்தவர்; இரவு பகலென்று உதவி கேட்டு வந்தவர்க்கெல்லாம் இல்லை என்று சொல்லாது நல்லதைச் செய்தவர்; ஏழைகளுக்காக இலவசமாக வாதாடி, அவர்கள் இடர் போக்கி வைத்தவர்: தொழிலாளர் தூணாக, தொகுதி மக்களின் தலைவனாக; துயர் என்று வந்தோருக்கு தெய்வமாக பணியாற்றி வந்தவர்.

தமிழரசுக் கட்சி அவரை முதன் முதலாக கிளிநொச்சித் தொகுதியில், போட்டியிட நிறுத்தியபோது, அந்தப் பெரும் தொகுதியில், ஒரே தினத்தில் பதினெட்டு கூட்டங்களில் உரையாற்றிய சேவைசெய்ய விரும்பினர். எடுத்த எடுப்பிலே திடரென இவர் எம். பி யாக நியமனம் பெறவில்லை. சிறுவனாக இருந்தபோதிலே, பசை வாளி தூக்கி, பின் சுவரொட்டி ஒட்டி, கொடி பிடித்து, கோஷமிட்டு, கொஞ்சம் கொஞ்சமாகக் கொள்கையில் பற்றுக் கொண்டு அது பன்மடங்காகப் பல்கிப் பெருகும் வரை தொண்டனாக, சேவையாற்றி நீண்ட நெடுந்தூர பயணத்தின்பின்னரே பாராளுமன்றம் சென்றார்.

6வது திருத்தச் சட்டத்தின் பின்னர் தமிழ் அன்னைக்கு மாறாக சத்தியம் செய்து பதவி எடுப்பதில்லை என்று உறுதி கொண்ட அவர், அதற்காக சட்டத்தரணி தொழிலைக்கூட தூக்கி எறிந்துவிட்டு லட்சியத்திற்காக வாழ்ந்துவந்தார்

புதிய அரசு பதவிக்குவந்த பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் கூட்டுறவுச்சங்கத் தலைவராக இருக்கக் கூடாது என்ற நடைமுறை வந்தபோது அதனைப் பின்பற்று, கூட்டுறவுச்சங்கத் தேர்தல்களில் போட்டியிட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்டு எம். பி யாக இருந்து கொண்டே, கூட்டுறவுச்சங்கத் தலைவராகப் பதவி ஏற்ற ஒரே ஒருவர் ஆலாலுதான். கூட்டுறவின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு யாழ் மாநகர ப. நோ. கூட்டுறவுச்சங்கத்திற்கு நிலையான நிரந்தர கட்டடம் நிறுவதில் பெரும்பங்கெடுத்தார்

கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றிய காலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானபோதும் சொந்தமண்ணை விட்டு, இந்தியா செல்ல விரும்பாது தொல்லைகள் தொடர்ந்து வந்தாலும் துயரங்கள் துரத்தி வந்தாலும் தொகுதி மக்களைவிட்டுச் செல்லமாட்டேன் என்று உறுதியுடன் வாழ்ந்து வந்தார். மக்கள் தொண்டர்களுக்கு உலகெங்கும் என்ன முடிவு ஏற்படுமோ அந்த முடிவுதான் ஆலாலுக்கும் கிடைத்துள்ளது. அவரின் மறைவு தமிழினத்திற்குப் பேரிழப்பாகும்.



வலதுகோடியில் அமரர் ஆலாலசுந்தரம், திருவாளர்கள் யோகேஸ்வரன், ராஜா விஸ்வநாதன் ஆகியவர்களுடன் காணப்படுகிறார்.

சிறப்பை அவரிடத்தில் மட்டும்தான் காண முடியும். எடுத்த காரியத்தை தொடுத்து முடிப்பதில் வல்லவர். சிரித்துப்பேசி, பழகுவதில் எல்லோருக்கும் நல்லவர். தொல்லைகள் பல வந்தபோதிலும், துயரங்கள் நேர்ந்தபோதிலும் கடைசிவரை தாயகத்தை விட்டுச் செல்லாமல், பதவி பறிக்கப்பட்டபின்பும், உதவி கேட்டு வந்தவர்களுக்கெல்லாம் ஓயாது உறங்காது சேவையாற்றியவர். தனது தொகுதியில் மட்டுமல்ல அயற்தொகுதியிலும் கூட எங்கெங்கு மரணச் சடங்கோ, திருமணமோ, குடிபுகுதல் நடந்தாலும், அங்கெல்லாம், காட்சிதரும் மனிதரராக விளங்கினார். மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தார்.

முதன்முதலாக வடபகுதியில் பஸ்தொழிலாளர் சங்கம் நிறுவி அதனை வழிநடத்தி வந்தது மட்டுமல்ல மொழி வழித் தொழிற் சங்கங்களுக்கும் ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தார்.

மேதின விழாக்களை மிகத் திறமையாக ஏற்பாடுசெய்து, மேடை அதிரும்படி முழங்குவார். நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்குகளில் மட்டுமின்றி சிவில் வழக்குகளில்கூட வாதாடுவதில் வல்லவர். தொழில் நீதிமன்றங்களில் கூட பல தொழிலாளர்களுக்காக வாதாடி அவர்களுக்கு வாழ்வளித்திருக்கிறார்.

சட்டத்தரணியான ஆலாலசுந்தரம் சென்னையில் படித்து பட்டம் பெற்ற பின்னர் தாயகம் திரும்பி தமிழ்மண்ணில்

- 'மணியம்' -

## மரணப்பிடியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் சந்தியில் சிங்கள மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. மதவாச்சியில் சிங்களக் குடும்பங்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். கிதிமாபுரத்தில் சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மக்களுக்கு எதிராக திருப்பப்படும் ஆயுதங்கள் தவிர்க்க முடியாமல் மக்கள் ஆயுதம் ஏந்துவதிலேயே போய்முடியும்."

## வல்லிபுர ஆழ்வார் கிருஷ்ண ஜயந்தி

(புலோலி)

வல்லிபுரஆழ்வார் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை 7ம் திகதி கிருஷ்ணஜயந்தி விழா வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

## கொள்ளை முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இணுவில் தெங்கு பனம்பொருள் கூட்டுத்தாபன பிரதான கிளையில் இரண்டாவது தடவையாக நடக்கவிருந்த கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது.

இரு இனம்தெரியாதவர்கள் சைக்கிள்கள் சகிதம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மேல்மாடி அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள ஊழியர்களைப் பயமுறுத்தி பணப்பெட்டகத்தை சோதித்துவிட்டு அங்கு பணம் ஏதும் இருக்காமல் போகவே அங்கு கடமைபுரியும் இரு பெண் ஊழியர்களின் கைப்பையை சோதித்துவிட்டு மறைந்துவிட்டார்கள் எனக் கூறப்படுகின்றது.

## மருத்துவ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வக் கல்லூரி இக்கால கட்டத்தில் விசனத்துக்குரியதே.

பல்கலைக்கழகம் தாபிக்கும் முயற்சிக்கு இடமளிக்கக்கூடிய இக்காலத்தில் உலகப் புகழ் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தந்த சேர். இராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் போன்ற புரவலர்கள் நம்மத்தியில் இல்லாது போனாலும் நம்மவர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுறவு அடிப்படையில் பல்கலைக்கழகம் நிறுவ முற்படலாம். தகுதி அடிப்படையில் மாணவர்களை தெரியலாம். இன்று இங்கில்லாத விவசாயம், பொறியியல் சட்டம் போன்ற துறைகளுக்கு அவசியம் தேவையிருப்பதை கருத்தில் கொள்ளலாம்.

கண்டதும் காதல் கொண்டதே கோலமென்று மேலோட்டமான நலன்களை விளம்பி குறுகிய நோக்கத்துடன் இல்லாது தொலைநோக்குடன் ஆழமாக உண்மையான சமுதாய நலன்விரும்பிகள் சிந்திப்பார்கள் என்று நம்புவோம் பொருத்தமான செயற்பாட்டிற்கு கைகொடுப்போம்.

தமிழர்கள் நிகழ்வுகளை நிகழ்த்துகின்றனரா? அல்லது நிகழ்வுகள் அவர்களை இழுத்துச் செல்கின்றனவா? என்ற ஈழநாடு ஆசிரிய தலையங்கம் 14-8-85சிந்தனைக்குரியதும் மீட்டலுக்குரியதுமாகும்.

க. செந்தில்குமார்
54, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

## உயிருடன் கட்டி வைக்கப்பட்டார்

(சாவகச்சேரி)

கொள்ளைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் அண்மையில் சாவகச்சேரியில் உயிருடன் மின்கம்பத்தில் கட்டப்பட்டார்

"நான்தான் கள்ளன்" என்ற அட்டையைத் தாங்கிய வண்ணம் மின்கம்பம் ஒன்றுடன் உயிரோடு கட்டப்பட்டிருந்த இந்நபர் செய்த திருட்டுக்கள் சில பட்டியல் போட்டு இவருடன் தொங்கவிடப்பட்டிருந்தது.

இயக்க மொன்றினால் இத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது. சில மணித்தியாலங்களின் பின் இந்நபர் மின்கம்பத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

## ரொமேஷ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டும் மேலும் காலம் தாழ்த்தக் கூடாது என்ற கருத்தை இலங்கைக்கு இந்தியா வலியுறுத்தியுள்ளது என்று தெரிவித்த மேற்படி வட்டாரங்கள்: பிரச்னைக்குத் தீர்வு காணும் இறுதிக்கட்ட முயற்சிகளை மேற்கொள்ளவே திரு. ரொமேஷ் பண்டாரி அடுத்தவாரம் இலங்கை வருகிறார் என்று தெரிவித்தது.

## சம்பந்தனுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஐ. இ. சம்பந்தன், இனந்தெரியாத சில நபர்களால் நேற்று பிற்பகல் அவரது இல்லத்தில் தேடப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பான ஓரிடத்தில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நேற்று நடந்த...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களும் பூட்டப்பட்டு கறுப்புக்கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. முக்கிய சந்திகளிலும் கறுப்புக்கொடிகள் காணப்பட்டன. சில வாகனங்களிலும் கறுப்புக்கொடி காணப்பட்டது.

ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ். வர்த்தக சங்கம், யாழ். ஊழியர் சங்கம், யாழ் வகுப்புத் தொழிலாளர் சங்கம் கூட்டாக விடுத்த கோரிக்கையை ஏற்று ஹர்த்தால் நடைபெற்றது.

வ. பி. போ. ச, பஸ் சேவை முற்றாக நடைபெறவில்லை. சில தனியார் பஸ் சேவைகள் காலையில் நடைபெற்றபோதிலும், நண்பகலுக்குப்பின் அச்சேவைகளும் இயங்கவில்லை.

## கொலைமூலம்.-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரைகள் நிகழ்த்த பெற்றன "சுட்டுக் கொலைசெய்வதன் மூலம் கொள்கைகளை அழித்துவிடமுடியாது. கொலையைச் செய்தவர்கள் இதற்கான காரணங்களை முன்வைக்க வேண்டும். எல்லோரும் மறுப்பதால் பிரச்னை தீர்ந்துவிடாது. பெரிய இயக்கங்களின் தலைவர்கள் குற்றவாளியைக் கண்டுபிடிக்கவேண்டும்" என்று பலரும் வலியுறுத்தினர்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், மூகமாலை அபிவிருத்திச்சபை திரு. ந. இராசேந்திரம், வட பிராந்திய போக்குவரத்துசபைத்தலைவர் திரு. சி. கனகரத்தினம், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிருஷ்ணர், கூட்டுறவுச் சமாசத்தலைவர் திரு. ப. சிவமகரசா, நல்லூர் த. வி. கூ. செயலர் திரு. எஸ், கனகசபாபதி. முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். ரி. தியாகராசா உட்பட சனசமூக பொதுஸ்தாபனங்கள், நாடக மன்றங்களின் பிரதிநிதிகளும் இரங்கலுரை நிகழ்த்தினர்.

யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர்கள் திரு. எஸ். நாகராசா உட்பட ஏனைய கூட்டணி உறுப்பினர்களும் சமூகம் தந்திருந்தனர்.

அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திரு. ஆலாலின் பூதவுடல் வைக்கப்பட்டு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது

'ஆலாலின்' பெரிய ஓவியப் படம் தாங்கிய வாகனங்கள் ஒலிபெருக்கியில் சோககீதங்களை இசைக்க பறைமுழங்க ஆண்கள் பெண்கள் சோகமே உருவாக அணிவகுத்துச் சென்றனர்.

தந்தையின் பூதவுடலுக்கு மூத்தமைந்தன் ஆ. வெற்றிச்செழியன் தீ மூட்டினார்.

பல்லாயிர கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## இந்திய...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம்நேற்று சென்னையில் தெரிவித்தார்.

திருமலை சம்பவத்தில் 20க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் தமிழர்களுக்கு சொந்தமான 45 வீடுகளும் 25 கடைகளும் சிங்கள ஊர்காவல் படையினரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார். (ரா)

## அந்த புரூட்டஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோகமே உருவாகக் காணப்பட்டனர்.

திரு தர்மலிங்கத்தின் இறுதி அஞ்சலி உரையை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை முன்னாள் தலைவர் திரு. எஸ். நடராசா ஆரம்பித்துவைக்க திரு. 'ஒறேட்டர்' சுப்பிரமணியம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, முன்னாள் யாழ். மேயர் திரு. அ. விசுவநாதன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி எஸ். சச்சிதானந்தம், ஸ்கந்தவரோதய அதிபர் திரு. நாகரட்ணம், யாழ். மாவட்ட அபிவிருத்திசபை முன்னாள் தலைவர் திரு. என். ராஜேந்திரன், திரு மதிமுகராசா உட்படப் பலர் உரைநிகழ்த்தினர்.

'சற்றடே றிவியூ' ஆங்கில வாரஏட்டின் ஆசிரியர் திரு. காமினி நவரத்ன இரங்கலுரை நிகழ்த்துகையில், படுகொலையுண்ட தர்மரை தமக்கு பல ஆண்டுகளாகத் தெரியும் என்றும், தமது நல்ல நண்பர் என்றும், தமிழீழத்துக்காக ஆரம்பம் முதல் போராடியவர்களில் இவரும் ஒருவர் என்றும் இவரைக் கொலைசெய்த அந்தப் புரூட்டஸை இனம் காண வேண்டும் என்றும் கூறினார்.

சுன்னாகம் சந்தைக் கடைகள் யாவும் பூட்டப்பட்டு மிக அமைதிநிலையில் காணப்பட்டது.

தொழிலகங்களிலும், ஏனையவாகனங்களிலும் ஆண்களும் பெண்களும் பெருமளவில் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக வந்தவண்ணம் இருந்தனர்.

ஒலிபெருக்குகளில் 'தர்ம'ரின் சேவை நலன்கள் கவிதைகளாகப் பாடப்பட்டன. சோக கீதம் ஒலிக்கப்பட்டது.

தர்மரின் பூதவுடல் கூட்டணி பதாகையால் போர்த்தி இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டபோது ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் துன்பரேகை படர்ந்தவண்ணம் அமைதியாகச்சென்றனர்

சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தர்மருக்கு இறுதிக் கண்ணீர் அஞ்சலி செலுத்தப்பட்டதும், அவரின் சகோதரர் திரு. வி. மாணிக்கவாசகர் பூதவுடலுக்குத் தீமூட்டினார்.


கடைசி நேர
வரிவிளம்பரம்

மன்னார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)
வெற்றுச் சாக்கு விற்பனை

மன்னார் பல நோ. கூ: சங்கத்தில் உள்ள 9259 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

முடிவு திகதி: 14-9-1985

மேலதிக விபரங்களுக்கு: "தலைவர், மன்னார் பல நோ. கூ. சங்கம், வயல் வீதி, மன்னார்" என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல: 023/2335

எம். எம். கியாஸ்,
பொதுமுகாமையாளர்

26-8-85 581

# பலாலி மாதா கோவிலில் 5000 பேர் உண்ணுவிரதம்!

(மாவிட்டபுரம்)
வெலிக்கடை சிறைச்சாலையில் உண்ணுவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் இளைஞர்களுக்காகவும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டுள்ள உண்ணுவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்தும் பலாலியில் சுமார் 5,000 பேர் உண்ணுவிரதம் மேற்கொண்டனர்.

பலாலி புனித ஆரோக்கிய மாதா கோவில் முன்றலில் இடம்பெற்ற இந்த ஒரு நாள் உண்ணுவிரதத்தை பலாலி வடக்கு கடற்றொழிலாளர் நல்லுறவுச்சபை, பலாலி கடற்றொழிலாளர் கிராமிய சேவைச்சங்கம், பலாலி வடக்கு புனிததிரேசா மகளிர் மன்றம், உட்பட மற்றும் பலாலியில் உள்ள பொதுஸ்தாபனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

ஆண்கள், பெண்கள், இளைஞர், யுவதிகள், சிறுவர், சிறுமியர் எல்லாமாக சுமார் 5000 பேர்வரையில் இந்த உண்ணுவிரதத்தில் கலந்து கொண்டனர்.

உண்ணுவிரதத்தையொட்டி கடற்றொழிலாளர்கள் எவரும் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 'அம்புலன்ஸ்' இல்லாததால் பெண் மரணம்!

(யாழ்ப்பாணம்)
தீக்காயங்களுடன் காலை பதினொரு மணிக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருபெண் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல 'அம்புலன்ஸ்' இல்லாததினால் தனியார் வாகனமொன்றில் அன்றுகாலை 6 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு மரணமானார்.

சாவகச்சேரியை சேர்ந்த திருமதி ஜெயவதி ஹரிசெல்லையா அருளானந்தத்தின் (68 வயது) மரண விசாரணையில் மேற்கண்டதகவல் தெரியவந்தது.

யாழ் மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் கணவர் எச் சி. அருளானந்தம் (71) சாட்சியமளிக்கையில் சம்பவதினம் காலை 10 மணிக்கு தான் சந்தைக்குப்புறப்பட்ட போது மனைவி காலைஉணவு சாப்பிட்டு கொண்டிருந்ததாகவும், 11மணிக்குத் திரும்பிவரும்போது வழியில்கார் ஒன்றுவந்ததாகவும் அதற்குள் தமது மனைவியை எரிகாயத்துடன் சி. ருக்குமணி வைத்திருந்ததாகவும் தானும் காரில் சென்றதாகவும் கூறினார்.

வளவிலுள்ள முருங்கைமரத்தில் மயிர் குட்டிக்கு மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்தபோது ஆடையில் தீப்பிடித்து விட்டதாக மனைவி கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

விசாரணையின் பின்னர் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

# "இந்த நீதிமன்றம் எமக்கு நீதி வழங்காது"

(கொழும்பு)
"இந்த நீதிமன்றம் எமக்கு நீதிவழங்காது சட்டத்துக்கு விரோதமாக 3 மாதங்களுக்கு மேலாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது இயக்கத் தோழர்கள் சிறைச்சாலையில் போராட்டத்துக்காகத் தமது உயிரை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எமக்கு நீதி வழங்காத இந்த நீதிமன்றத்தினால் வழங்கப்படும் இந்த குற்றப்பத்திரத்தை நான் ஏற்கமாட்டேன்"

இவ்வாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு எச் டபிள்யூ சேனநாயக்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கருவப்பங்கேணியைச் சேர்ந்த சண்முகம் கணேசமூர்த்தி அல்லது 'பையன்' என்ற இளைஞர் மீது 83ம் ஆண்டு அக்டோபர் 30 ம் திகதி பொலிஸ் கான்ஸ்டபிள்களான சில்வா விஜயரத்ன ஆகியோரைக் கொலை செய்ய முயன்றதாகக்குற்றம் சாட்டப்பட்டு அந்த இளைஞர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சட்டத்தின்படி எம்மை 18 மாதங்களுக்கு மேல் தடுப்புக்காவலில் வைக்க முடியாது என்றும் தெரிவித்த சந்தேக நபர் குற்றப்பத்திரத்தை ஏற்கமறுத்தபோது நீதிபதி "அது எல்லாம் பொறகு சொல்லலாம் இப்ப அல்ல. இதை எடுங்கோ' என்று கூறியதை அடுத்து சந்தேக நபர் குற்றப்பத்திரத்தை ஏற்றுக் கொண்டார்.

"உங்களுக்கு சட்டத்தரணி ஒருவரும் இல்லையா"? என்றும் நீதிபதி கேட்டபோது தமக்குத்தேவையில்லை என்று சந்தேக நபர் கூறியதை அடுத்து நீதிபதி வழக்கை செப்டம்பர் 3 ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## இன்று இருமணி நேர மறியல் தொழிற்சங்கங்களுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய அனைத்துத் தொழிற்சங்கங்களும், வெலிக்கடைச் சிறையில் உண்ணுவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாக இன்று வெள்ளிக்கிழமை காலை நடத்தும் 2 மணி நேர மறியல் போராட்டத்திற்கு சகல வாகனச் சொந்தக்காரர்களும், ஸ்தாபனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ். வகுப்புத் தொழிலாளர் சங்கம் விடுத்த வேண்டுகோளில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது

13 தொழிற்சங்கங்கள் கூட்டாக இன்று காலை 10 மணி முதல் 12 மணிவரை சகல காரியாலய வாசல்களிலும், நவீன மார்க்கட்டிலும் இந்த போராட்டத்தை நடத்துகின்றன.

## கிராமிய தொழிலாளர் சங்கம் உண்ணுவிரதம்

(சாவகச்சேரி)
வெலிக்கடைச்சிறையில் சாகும்வரை உண்ணுவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் உண்ணுவிரதப் போராட்டத்திற்கு கிராமியத் தொழிலாளர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவிக்கும் முகமாக சங்க உறுப்பினர்கள் சிலரையும் இத்தொடர்ச்சியான உண்ணுவிரதத்தில் கலந்து கொள்ளச் செய்யத் தீர்மானித்துள்ளதாக கிராமிய தொழிலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கிராமங்களில் தமது உழைப்பு சக்தியைத்தவிர வேறு எதுவுமேயில்லாத ஏழை விவசாயிகள் மத்தியில் ஆழமாக வேலை செய்து அமைப்பு ரீதியாக அவர்களை அணிதிரட்டிய கிராமிய தொழிலாளர் சங்கம் இப்போராட்டத்தில் இணைவது இப்போராட்டத்தின் வலுவை மேலும் ஒருபடி முன்கொண்டுசெல்லவே உதவும் மாணவர், இளைஞர் என்று இருந்த போராட்டம் இதன் மூலம் முழுமக்களுடனும் ஐக்கியப்படும் வாய்ப்பை எய்துகின்றது" என்று மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரிசி ஆலைகள் மூடப்படுகின்றன!

(வவனியா)
வவனியா நகரில் உள்ள பல அரிசி ஆலைகள் மூடப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது என்று ஆலைநிர்வாகிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சில ஆலைகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன.

வவனியா நகரில் 50க்கு மேற்பட்ட பெரிய அரிசி ஆலைகள் உள்ளன. ஆலைகள் மூடப்படுவதினால் சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று மதிப்பிடப்படுகின்றது.

ஆலைகளுக்குச் செல்லும்சிலர் பணம்கொடுக்காது மூட்டைக்கணக்கில் அரிசியை எடுத்துச் செல்வதினாலும் வல்செயல் தொடர்வதினாலும் ஆலைகளைத் தொடர்ந்து நிர்வகிக்கமுடியாது உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அரச விடுதிகளில் கொள்ளை

(வவனியா
வவனியா புகையிரதநிலையத்துக்கு அருகில் கற்குழிப் பகுதியில் உள்ள வீடுகள், அரச விடுதிகள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

இப் பகுதி வீடுகளிலும் அரச விடுதிகளிலும் இருந்த மக்கள் வெளியேறிச்சென்றதைத் தொடர்ந்தே மேற்படி திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 21 (1985-9-6)
கிழமை: வெள்ளி
திதி: ஸப்தமி பின்இரவு வரை
நட்சத்திரம்: கார்த்திகை முன்இரவுவரை

மேடம்: தானியவிருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதிக சிந்தனையின்மூலம் சிறிய தலையிடியும் தோன்றக்கூடும்

இடபம்: இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம். எதிர்பார்த்ததைவிட அற்பலாபம் கிடைக்கும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும்.

மிதுனம்: சமயோசிதமான நடவடிக்கையின்மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள். இல்லறத்தில் அமைதிநிலவும். பேச்சுவார்த்தை இன்று நல்ல பலனைத் தரும்

கடகம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. இனபந்துக்களின் தொல்லைகளும் அதிகரிக்கும்.

சிங்கம்: கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். தாய்வழி ஆதரவும் உண்டு.

கன்னி: சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடம் உண்டு பிள்ளைகளின் முன்னேற்றம் பொருமையைத் தேடித்தரும் புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும்.

துலாம்: துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படும் அவதானம் வேண்டும்.

விருச்சிகம்: ஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். காதலர் வாழ்வில் திகதிப்பான சம்பவங்களும் இடம்பெறும்.

தனுசு: மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கலாம். இதன்மூலம் கைகலப்பு ஏற்படலாம் உடல்நலமும் பாதிக்கப்படும்.

மகரம்: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும்.

கும்பம்: தொல்லை அதிகரிக்கும். தொழில்புரியும் இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு. விழிப்புடன் செயலாற்றவும்.

மீனம்: அதிர்ஷ்டகரமான தினம் சிலருக்கு எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டு.

திருமலை
= வே. ரவீந்திரன் =




"கண்ணன் சொன்னான் கீதையிலே கடமையைச் செய்வாய் பாரினிலே."

அன்பளிப்பு: மில்க்வைற், யாழ்ப்பாணம்.

பொன்னாலையில் — சகாய விற்பனை

7-9-85ல் பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர்த்திருவிழாவில்
மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் ரூபா 15/-ற்கு
மில்க்வைற் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு

★ அழகிய ஸ்ரிக்கர் ★ பொலித்தீன் பாக் ★ அறிவுநூல்கள்
★ மில்க்வைற் செய்தி ★ பொன்மொழிப் பிரசுரங்கள்

யாவும் இனமாக வழங்கப்படும்.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச்
சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த
பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

நியூ சினிமாலயா
[R. G பிக்சூஸ் மேல்மாடி]
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
NEW YORK NIGHTS
(வயது வந்தோர் மட்டும்)

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
The Blue Lagoon
Adults only

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
10-30, 12-30, 2-30. 4-45
BLOODY AVENGER

மே(f)பெயர் மினி சினிமா
(சுன்னாகம் காளிகோவில் அருகில்)
10-30, 2-15, 5-15
சந்திரசேகர் - அம்பிகா நடித்த
நாகம்
பசம்பினாலும் நாயினாலும் சாகசம் நிறைந்த படம்.

ஸ்ரான்லி மினி
"K5" திரைவானில்
10-30, 12-30, 2-30 4-30, 6-30
California Girls
அமெரிக்க பெண்களின் பொழுது போக்குகளும் இறந்த பாடல்களும் நிறைந்த படம்.
Adults only

வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30, p.m.
26 ம் திகதி மட்டும்
THE STUNT MAN
பயங்கர காட்சிகள் நிறைந்த முதல்படம்.
யாழ்ப்பாணத்தில்

வீகே சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
சிவகராஜன், சிவசந்திரன், பூர்ணிமா ஜெயராம், இளிக்கமிதா, ஜெய்சங்கர் நடித்த
சாரு மகேந்திரரவின்
நீங்கள் கேட்டவை
சஸ்டுமன் கலர்

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கு - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
Private-Lessons
15 வயது பணக்கார சிறுவனின் teenage ஆசைகளை பயன் படுத்தி பணம்பறிக்கும் நன்றி மறந்த கார் டிரைவரி பாலியல் ஆசையை தூண்டி சிறுவனை கெடுக்கும் வேலைக்காரப் பெண் ஏதும் அறியா கெடுக்கப்பட்ட சிறுவன் வேலைக்கார பெண்ணை மானசீகமாக காதலிக்கும் விபரீதம் teenage வயதில் இளைஞர்கள் செய்யும் குறும்புகள்.
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்.


## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வட்டார மெய்வல்லுநர் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணங்களை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இம் மாதம் 5-ம், 6-ம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறவிருந்தது அறிந்ததே.

பிற்போடப்பட்ட இப் போட்டிகளுக்கான புதிய திகதிகள் காலக்கிரமத்தில் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படுமென யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தன் தெரிவித்துள்ளார். (ச)

## சனசமூக நிலைய கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கிழக்கு தொட்டிலடி சனசமூக நிலையம் அண்மையில் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து அக்கட்டிடம் பாவிக்கமுடியாத நிலையில் உள்ளது.

அத்தீயில் மேற்படி நிலையத்திலிருந்த பெறுமதி வாய்ந்த நூல்கள், வானொலிக் கருவிகள், தளபாடங்கள் உட்பட அனைத்தும் எரிந்துவிட்டதாகவும் அதனால் தமக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சனசமூக நிலையத்தினர் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி செயலுக்கு சில தீய சக்திகளே காரணமென தெரியவந்துள்ளது. இதுகுறித்துப் பொதுமக்களும் கவலையடைந்துள்ளனர். (ச)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"சிவயோக சுவாமிகள் வரலாறும் சாதனைகளும்" நூல் வெளியீட்டுவிழா இம்மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். யாழ். மத்திய கல்லூரியில்நடைபெறும். இவ் விழாவிற்கு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமைவகிப்பார்.

நூலாசிரியர் திரு. மு. அருணாசலத்தின் ஆரம்பஉரையைத் தொடர்ந்து கலாநிதி சி. க. சிற்றம்பலம், திரு. க. சொக்கலிங்கம், திரு. க. சி. குலரத்தினம் ஆகியோர் ஆய்வுரை வழங்குவர்.

மக்கள் வங்கி ஆணையாளர் திரு. வி. நடராசா, மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா ஆகியோர்சிறப்புப்பிரதி பெறுவர்.

இவ்வெளியீட்டு விழா 5-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறுமெனநேற்றைய ஈழநாடு பதிப்பில் வந்த செய்தி தவறானதாகும். (ப)


உஷா மினி
புதிய வெளியீடு
10-30, 2-30, 4-45, 6-45
RAMBO
(ஒரிஜினல் பிரதி)
அமெரிக்க வீரன் வியட்நாம் காடுகளில் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் போர்க் கைதிகளை தன்னந்தனியனாக மீட்டு எடுக்கும் வீரகாவியம்.


## நாளை பொன்னாலை ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரித்திரபரசித்திப் பெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. நாளை சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஞாயிறு காலை திருவடி நிலையில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ச)

## விரிவுரையாளர்களும் பங்குகொண்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்களும் நேற்றுமுன் தின உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருப்போருக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொள்ளும் அனுதாப உண்ணாவிரதத்திலேயே விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர். [நா]

## அல்லைப்பிட்டி சஞ்சுவானியார் வேஸ்பர் ஆராதனை

அல்லைப்பிட்டிச் சஞ்சுவானியார் ஆலயத்திலே வேஸ்பர் ஆராதனை சிறப்பாக நடந்தேறியது.

வெண்மணல் பரந்த ஆலயவளவெங்கும் மின்னொளி பரவ ஆலயத்தைச் சுற்றி அமைந்த புறவீதிவழியாக நடைபெற்ற நற்கருணைநாதர் பவனி பக்திப்பரவச மூட்டியது.

சீருடை பணிந்த இளைஞர் எண்மர் வெண்குடையைத் தாங்கிட, பங்குத்தந்தை நற்கருணைநாதரைத் தாங்கி நடக்க. அதன்முன்னே பெருந்திரளான பக்தர் இருவரிசையில் செல்ல இவ்விதம் அமைதியாகப் பவனிவந்தார் நற்கருணைநாதர். அடுத்தநவ் காலை திருநாட் பலிபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்திரு கமலஸ் கிலன் அடிகளார், அரசனின் அநியாயத்தைச் சுட்டிக்காட்டவே தயங்கிடாத அருளப்பரின் அஞ்சாமையையும் நேர்மையையும் எடுத்துக்காட்டி அருமையான ஒரு சொற்பொழிவை வழங்கினார்.

அடுத்த நிகழ்ச்சியாக அலங்காரத் தேர்மீது அல்லையூர் அருளப்பர் பவனி வந்தார். அருளப்பர் பவனி வந்த போது பாடல்கள் இசைக்கப்பட்டன.

—அன்ரன் அருள்வண்ணன்

## எகிப்தில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நிதியமைச்சர் திரு. அலிலுப்டி நியமிக்கப்பட்டிருப்பதால் பொருளாதார நெருக்கடியே முக்கிய காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எகிப்து பெருமளவு நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது. இதனைச் சமாளிக்கும் பொறுப்பு புதிய அரசாங்கத்திடம் பெருமளவு தங்கியுள்ளது. (கி)

## "இன்றைய சூழ்நிலையில் கிராமந்தோறும் முதலுதவி சிகிச்சை நிலையம் தேவை"

(மாவிட்டபுரம்)

"இன்றைய சூழ்நிலையில் கிராமங்கள் தோறும் முதலுதவிச்சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். கிராமங்களில் எதிர்பாராது ஏற்படும் அசம்பாவிதங்களின்போது மக்களுக்கு உடனடியாக முதலுதவிச் சிகிச்சை அளித்து அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்ற இச்சிகிச்சை நிலையங்கள் உதவமுடியும்."

இவ்வாறு மாவிட்டபுரத்தில் முதலுதவி சிகிச்சை நிலையம் ஒன்றை திறந்து வைத்துப் பேசிய சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி கூறினர்.

திரு. வ. வைரவப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சென் ஜோன் அம்புலன்ஸ் படை அதிகாரிகள் திரு. கு. நடேசபிள்ளை, திரு. நா. போஜன் ஆகியோரும் கலந்து உரையாற்றினர். மாவிட்டபுரம் கிராமோதய சுகாதார நிலையத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளமேற்படி முதலுதவி சிகிச்சை நிலையத்தில் முதலுதவி பெட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## சனசமூக நிலைய ஆதரவில் உண்ணாவிரதம்

(கொக்குவில்)

வெலிக்கடை சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் ஆதரவில் ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

கொக்குவில் மாத்தனை முருகன் கோயில் மண்டபத்தில்நடை பெற்றமேற்படி உண்ணாவிரதத்தில் பெருந்திரளான மக்கள் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டனர்.

## பாடசாலைக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் ரூ. 34,000 செலவில் பாடசாலை வகுப்பறைகள், விடுதிகள், சுற்றுப்புறம் யாவும் சீரமைக்கப்பட்டுள்ளன.

இவற்றை நேரில் பார்வையிட்ட வட்டாரக்கல்வி அதிகாரி; "செலவிலும் பெறுமதி மிக்கதாக வேலைகள் நடைபெற்றுள்ளன இதற்காக அதிபரையும், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன்" என்று பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளார். [ஐ]

## 'லில்லி' இல்லம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் புனித பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி பாடசாலை அதிபர் சகோ. சகோதரி லீசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி க. விநாசமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் சகோ. சகோதரி மேபிள் பிரதம விருந்தினராகவும் கலந்துகொண்டனர். இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் லில்லி இல்லம் முதலிடம் பெற்றது. (ச)

## தமிழர் ஆசிரியர் சங்கம் அனுதாபம்


(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலையில் நீதி வேண்டி உயிர்விடும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் இளைஞர்களின் நியாயமான கோரிக்கைக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமது முழுமையான ஆன்மீக ஆதரவினைத் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையில் வாடும் இளைஞர்களின் நிலையை உலகஅரங்கிற்கு எடுத்துக்காட்டும் வண்ணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாணவர்கள் நடத்திவரும் தொடர்ச்சியான உண்ணாநோன்பிற்கும் சங்கம்தனது முழுமையான ஆதரவினைத் தெரிவிக்கின்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் நேற்றுவெளியிட்ட அறிக்கை மூலம் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளார். (ஸ)


திருநாடலங்கரிந்த
ஓராண்டு நினைவு
திரு. அலோசியஸ் அமிர்தநாதர்
(பொறியியலாளர்)



தோற்றம்:
18-09-1950

★

மறைவு:
06-09-1984

அமுதம் எங்கே?
அன்பு வழிந் தொழுதமலர் வதனம் எங்கே?
ஆருயிரே புன் சிரிப்பின் அமுதம் எங்கே?
மின் பிரமை போல் மின்னி மறைந்த செல்வா
மீளாத துயர்க்கடலில் ஓராண்டாக
என்புருகி நெஞ்சமெலாம் உதிரஞ் சிந்த
இரு கண்ணீர் ஆறாகத் துடிக்கின்றோமே
பொன்னுலகில் நின்று துணைக்கரங்கள் நீட்டிப்
பொங்குதுயர் நீக்கி பரவணைப்பாய் ஐயா.

மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர், நண்பர்கள்.
874, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 565





கோலாகல ஆரம்பம்
ராஜா மினி
காலை 10-15 காட்சியுடன் ஆரம்பமாகின்றது.
★ காஞ்சி காமாட்சி ★
(கலர்)
(577) மற்றைய காட்சி நேரங்கள் பி. ப. 2-30, 6-30

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# "உரிமை கோராத சம்பவம்: தடுத்து நிறுத்தவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"மானிப்பாய், கோப்பாய் தொகுதிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு வி. தர்மலிங்கமும், திரு மு. ஆலாலசுந்தரமும் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சி தரும் சம்பவமாகும். இது அப்பட்டமான மனித உரிமை மீறலும், மனிதாபிமானமற்ற கொடூரச் செயலுமாகும். இச்செயலை மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் மத்திய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது அதேவேளை இது போன்ற இனம் காட்டாத, உரிமை கோரப்படாத மனித உரிமை மீறல் சம்பவங்களைத் தமிழ் மக்கள் மத்தியில் தடுத்து நிறுத்த சகல சக்திகளும் முன்வரல் வேண்டும்"

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## 3500...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கு ஊர்வலமாகச்சென்றனர்.

இவ்வூர்வலத்தில் எட்டுக் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 3500 மாணவர்கள் கலந்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது. (ரா)

# மரண அறிவித்தல்

## திரு. செல்லையா சிவபாதம்

(உரிமையாளர் வேலழகன் ஸ்ரோர்ஸ் திருகோணமலை)

திரு செல்லையா சிவபாதம் (உரிமையாளர்- வேலழகன் ஸ்ரோர்ஸ் திருகோணமலை) 04-09-85ல் திருகோணமலையில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சிவக்கொழுந்து (யாழ்ப்பாணம்) இளைய மருமகனும் சிவதேவியின் அன்புக் கணவனும் சிந்துஜாவின் அன்புத் தந்தையும் ஆவார். (579)

# மரண அறிவித்தல்

## திருமதி த. மீனாட்சி

யாழ்ப்பாணம் கோணந்தோட்டத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் மீனாட்சி நேற்று வியாழக்கிழமை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் பிரதாபன், (மாநகரசபை) பத்மநாதன் (சுவிஸ்), மலர்தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், நேசமலர் ரூபவதி, நல்லைநாதன் (டோகா) ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கோணந்தோட்டம் இல்லத்தில் 06-09-85 வெள்ளிக்கிழமை நடைபெற்று காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக விக்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மக்கள், மருமக்கள்.

564

# மரண அறிவித்தல்

## திரு ஏணஸ்ட் ஜெபரட்ணம் சாமுவேல்

திரு. ஏணஸ்ட் ஜெபரட்ணம் சாமுவேல் அவர்களின் இறுதி மரண ஆராதனை அன்னாரின் நுணாவில் மேற்கில் அமைந்துள்ள இல்லத்தில் 07-09-85 சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு நடைபெற்று சாவகச்சேரி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் யாவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்,

"பவளவாசா" — தகவல்: மு. அ. ஜெயராஜா
நுணாவில் மேற்கு. — மைத்துனர்.
சாவகச்சேரி. — உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம், முல்லைத்தீவு,

561

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under ramber B 10036/81 Eelananu P O. Box: 49, Telegram: Eel nadu, Telephone: 22389 — 24126

### கிரிக்கெட் டெஸ்ட்:

## ரூபவாஹினி ஒளிபரப்பு இல்லை!

(கொழும்பு)

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையேயான 2-வது கிரிக்கெட் டெஸ்ட் கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் இன்றுஆரம்பமாகிறது.

தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த கிரிக்கெட் டெஸ்டின் நேர்முக வர்ணனை ரூபவாஹினியில் ஒலிபரப்பு செய்யப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுவரொட்டி மூலம்-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரணமான நீதிராஜா கிறிஸ்டி (20 வயது) என்பவருக்கு அஞ்சலி செலுத்தி தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) பிரசுரம் வெளியிட்டுள்ளது.

கவிதை நடையில் இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. (மா)

## ராஜீவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தென்னிந்திய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் நேற்று சென்னைக்கு வந்து இந்தியப் பிரதமரின் விசேஷ அனுதாபச் செய்தியை, த. வி. கூட்டணியின் செயலாளர்நாயகமுமான திரு அமிர்தலிங்கத்துக்குத் தெரிவித்தார் திரு அமிர்தலிங்கம் அந்த அனுதாபச் செய்தியை கொழும்பிலிருக்கும் கூட்டணிப் பிரமுகர்களான திரு. நீலன் திருச்செல்வம், திரு எஸ் சூசைதாசன் ஆகியோர் மூலம் இறந்தவர்களின் குடும்பத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட செய்தியில், அன்னாரின் மறைவு குறித்து பாரத அரசும் மக்களும் அதிர்ச்சியும் துயரமும், அனுதாபமும் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக்கட்சித் தலைவர்களும் அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்துள்ளனர். (மா)

## உண்ணாவிரதம் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக, யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அனுஷ்டிக்கும் உண்ணாவிரதப் போராட்டம் யாழ் குடாநாடெங்கும் கிராமம் கிராமமாக விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் 3 நாள் தொடர் உண்ணாவிரதத்தின் 4 கட்டம் நடைபெற்று தருவது குறிப்பிடத்தக்கது.

### 10நாள் உண்ணாவிரதம்

கொழும்புத்துறையிலுள்ள இளைஞர் ஒருவர் 10நாள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

கொழும்புத் துறைசந்தியிலுள்ள மடம் ஒன்றில் இவ்விளைஞர் உண்ணாவிரதம் இருக்கிறார்.

கடந்த 28 திகதி தொடக்கம் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கிய இவ்விளைஞர் மிகவும் களைப்படைந்த நிலையில் படுத்த படுக்கையாகக்கிடக்கக் காணப்பட்டார். (மா)

# 210 தபால் பைகள் யாழ். வந்துசேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரத்திலுள்ள தபால் பைகளில் பஸ்மூலம் 210 தபால் பைகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தபால் கந்தோருக்கு கொண்டு வரப்பட்டது.

இப்பைகளில் வந்த கடிதங்கள், நேற்று யாழ் நகரில் விநியோகம் செய்யப்பட்டது.

தென்பகுதிக்கு அனுப்ப வேண்டிய சுமார் 150 தபால் பைகள் யாழ். தபால் கந்தோரில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ரயில், பஸ் போக்குவரத்து இல்லாததினாலும் தபால் வான்கள் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தபால் வான் சேவை நிறுத்தப்பட்டிருப்பதாலும், இத்தபால் பைகளை அனுப்பமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

வான் மூலம் தபால் சேவையை மீண்டும் நடத்துவதற்கு கொள்ளையடிக்கப்பட்ட வான்களை தமிழ்ப்பேசும் மக்களின் நன்மை கருதி திருப்பி ஒப்படைக்குமாறு தபால் கந்தோர் ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# ரூ. 2 லட்சம் பொருள்கள் லொறியில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

மஸ்கன்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தின் வானில் கொண்டுவரப்பட்ட இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொடிகாமத்தில் வைத்து இனந்தெரியாத இளைஞர்களினால் நேற்றுமுன்தினம் கொள்ளையடிக்கப்பட்டது.

கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்து யாழ்ப்பாணக் கிளைக்கு இப்பொருட்கள் கொண்டு வரப்பட்டபோதே கொள்ளையடிக்கப்பட்டது.

மோட்டார்கள், இரும்புப் பொருட்கள், பெருந்தொகையான ஆணிவகைகளே கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

லொறியை மறித்து சாரதி, கிளீனர் கடத்தப்பட்டு லொறி கடத்திச் செல்லப்பட்டதாகவும் பின்னர் பொருட்கள் எடுக்கப்பட்டபின்னர் லொறி சாரதியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சாரதிக்கோ, கிளீனருக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (க)

# "தியாகம்செய்யவும் ஆசிரியர் முன்வரவேண்டும்!"

(கொழும்பு)

"எமது எதிர்காலச் சந்ததியினரை சிறந்தமுறையில் உருவாக்கும் ஆசிரியர்கள் அவசியம் ஏற்படும்பட்சத்தில் சில தியாகங்களைப் புரியவும் தயாராக இருக்கவேண்டும். இடமாற்றம் போன்ற விவகாரங்களில் ஆசிரியர்கள் சிலசமயங்களில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது இவையெல்லாம் நிரந்தரமானவையல்ல; உரியகாலத்தில் அவற்றிற்கு நிவாரணம் காணப்படும்"

இவ்வாறு கல்விச்சேவைக் குழு உறுப்பினரும் சட்டத்தரணியுமான திரு ஜி. ஜெயக்குமார் தெரிவித்தார்.

அண்மையில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்கான மூன்று வாரகால சேவை முன் பயிற்சி நீர்கொழும்பு போலவலான ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்றது 59 பெண்களுக்கும் 42 ஆண்களுக்கும் இந்த பயிற்சி அளிக்கப்பட்டது. கல்வி அமைச்சைச் சேர்ந்த செல்வி சுவர்ணா நவரத்தினம் இப் பயிற்சிக்குப் பொறுப்பாக இருந்தார்.

பயிற்சியின் இறுதி நாளன்று புதிய ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட கண்காட்சியிலும் கலைவிழாவிலும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட திரு. ஜெயக்குமார் மேலும் கூறியதாவது:-

இங்கு பயிற்சிபெற்ற சகலரும் திறமைசாலிகள் என்பதை இங்கு நடத்தப்பட்ட கண்காட்சியும் கலைவிழாவும் எடுத்துக்காட்டுகிறது.

ஆசிரியர்பதவிக்கு விண்ணப்பிக்கும் போது பதவி கிடைக்குமா - கிடைக்காதா என்ற எண்ணத்துடன் இருப்பவர்கள் பதவி கிடைத்தவுடன் தாம் விரும்பும் இடங்களுக்கு இடமாற்றம் கிடைக்காத என எண்ணத் தொடங்கி விடுகின்றனர். இவ்வாறான எண்ணத்தைத் தவிர்த்து இதுபோன்ற விடயங்களில் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்.

கலாசாலை அதிபர் திரு கே. டபிள்யூ பெரேரா கோப்பாய் கலாசாலை விரிவுரையாளர் திரு. வி. கே. சிவப்பிரகாசம் உட்பட பலர் உரையாற்றினர்.

## பயணிகள்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மினி பஸ்களில் மூன்று பஸ்கள் மீண்டும் யாழ். நகர் திரும்பிவிட்டன.

மதவாச்சியில் வைத்து ஒரு மினிபஸ்பிரயாணிகள் கடுமையாகத் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே மற்றைய மினி பஸ்கள் திரும்பிவிட்டன.

காயமடைந்தவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மதவாச்சியிலிருந்து பஸ் ஒன்றில் வவுனியா நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த யோகானந்தன் என்னும் இளைஞர் இருநபர்களால் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## ஜெயலலிதாவுக்கு புதிய பதவி

ராஜ்யசபா உறுப்பினரும், சினிமா நடிகையுமான செல்வி ஜெயலலிதா தமிழக அரசின் கொள்கை பரப்பும் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### வீரப்பன் பொறுப்பில் மாற்றம்

இதேவேளை, தமிழக செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர் எம் வீரப்பன், சில இலாகாக்கள் மாற்றங்களுடன் சுற்றுலா மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சராக மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் வீரப்பன் பொறுப்பில் இருந்த செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பம் ஆகிய இலாகாக்களை முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் பெற்றுள்ளதுடன் முதல்வரிடமிருந்த தொல்பொருள் துறை, திட்டம், பாஸ்போர்ட் ஆகிய இலாகாக்கள் திரு வீரப்பனுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ரா)